ExamOne®
A Quest Diagnostics Company

# காப்பீடு விண்ணப்பதாரருக்கான செயல்குறிப்புகள்

## மருத்துவ உதவியாளர் சோதனை என்பது என்ன?

மருத்துவ உதவியாளர் சோதனை என்பது உங்கள் மருத்துவப் பின்னணியைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காக உங்களுடன் நடத்தப்படும் ஒரு தனிப்பட்ட பேட்டியாகும். இந்தப் பேட்டியானது உங்கள் சோதனை நேரத்தில் தொலைபேசி வழியே அல்லது நேர்முகமாக நடத்தப்படலாம். காப்பீட்டு நிறுவனம் உங்கள் தற்போதைய உடல்நலத்தை முழுமையாக மதிப்பாய்வு செய்ய இந்தத் தகவல்கள் உதவும். இந்தச் சோதனையில் வழக்கமாக உயரம், எடை, ரத்த அழுத்தம், நாடித் துடிப்பு ஆகியவற்றைப் பதிவு செய்வது அடங்கும். ரத்தம், சிறுநீர், வாயில் உள்ள திரவம், காப்பீட்டு நிறுவனத்தின் வழிகாட்டுநெறிகளைப் பொறுத்து ஒரு எலக்ட்ரோகார்டியோகிராம் (EKG) ஆகியவற்றைச் சேகரிப்பதும் இந்தச் சோதனையில் அடங்கலாம்.

## மதிப்பிடப்பட்ட சோதனை நேரம்

- ரத்தம் எடுப்பதற்கும் சிறுநீர் சேகரிப்பதற்கும் 10 முதல் 20 நிமிடங்கள்
- மருத்துவ உதவியாளர் சோதனை, ரத்தம் எடுத்தல், சிறுநீர் சேகரிப்பு ஆகியவற்றுக்கு 20 முதல் 30 நிமிடங்கள்
- மருத்துவ உதவியாளர் சோதனை, ரத்தம் எடுத்தல், சிறுநீர் சேகரிப்பு, EKG ஆகியவற்றுக்கு 30 முதல் 45 நிமிடங்கள்

## சோதனை எங்கு நடத்தப்படும்?

ExamOne நிபுணர்கள் இந்தச் சோதனைகளை உங்கள் வீட்டில், பணியிடத்தில் அல்லது வசதியான ஒரு ExamOne அல்லது Quest Diagnostics தலத்தில் நடத்துவார்கள்.

## ரத்தம் எடுக்கப்பட வேண்டியிருந்தால் என்ன ஆகும்?

காப்பீட்டு நிறுவனத்திற்கு ஒரு ரத்த மாதிரி தேவைப்பட்டால், மருத்துவ ரீதியாகப் பயிற்சிபெற்ற ExamOne நிபுணர் ஒருவர் ரத்தம் எடுப்பார். மாதிரியைச் சேகரிப்பதற்கு, ஒற்றைப் பயன்பாட்டுக்கான நுண்ணுயிர்நீக்கிய, எறியத்தக்க ஊசிகளே பயன்படுத்தப்படும், எப்போதுமே வினைல் கையுறைகள் அணியப்படும்.

## EKG என்றால் என்ன?

காப்பீட்டு நிறுவனத்திற்கு ஒரு எலக்ட்ரோகார்டியோகிராம் (EKG) தேவைப்பட்டால், அது சோதனை நேரத்தில் நடத்தப்படும். EKG என்பது இதயத்தின் மின்சாரத் தூண்டல்களைப் பதிவு செய்கிறது. இந்தப் பரிசோதனை வழக்கமாக 10 நிமிடங்களுக்குக் குறைவான நேரத்தில் நிறைவடைந்துவிடும்.

## சோதனை நிறைவடைந்த பின்பு என்ன நடக்கும்?

மருத்துவ உதவியாளர் சோதனையும் எந்தக் கூடுதல் தேவைப்பாடுகளும் காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பப்படும். சோதனையின்போது பெறப்படும் எந்த மாதிரிகளும் எங்கள் ஆய்வகத்திற்கு அல்லது வேறொரு ஒதுக்கப்பட்ட ஆய்வகத்திற்கு அனுப்பப்படும், முடிவுகள் மதிப்பாய்வுக்காகக் காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பப்படும். ஆய்வகத்தில் உள்ள மாதிரிகளின் மீது நடத்தப்படும் பரிசோதனைகளைப் பற்றி ExamOne நிபுணர்களுக்குத் தெரியாது. அவர்கள் பரிசோதனை முடிவுகளைப் பெற மாட்டார்கள்.

## விண்ணப்பதாரருக்கான செயல்குறிப்புகள்:

துல்லியமான தகவல்களைப் பெற, பின்வருவனவற்றைச் செய்யுமாறு உங்களுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது:

- தற்போதைய மருந்துகளின் பெயர்களையும் மருந்தளவுகளையும் அளித்தல்
- கடந்த 5 ஆண்டுகளில் நீங்கள் வருகையளித்த எந்த மருத்துவர்கள் அல்லது க்ளினிக்குகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி எண்கள் ஆகியவற்றையும் வைத்திருத்தல்.
- நோயறிதல் சோதனைத் தேதி, சிகிச்சை, சிகிச்சையின் முடிவு, சிகிச்சையளித்த மருத்துவர் பற்றிய தகவல்கள் ஆகியவை உள்பட மருத்துவ நிலைகள் அல்லது நோயறிதல் சோதனை முடிவுகளின் பட்டியல் ஒன்றை வைத்திருத்தல்.
- சோதனை நேரத்தில் ஒரு புகைப்பட அடையாளத்தைத் தயாராக வைத்திருத்தல்.
- உங்கள் முகவர் வேறு விதமாக அறிவுறுத்தியிருக்காத பட்சத்தில், உங்களுக்கு அனுப்பப்பட்ட எந்த விண்ணப்பக் காகித ஆவணங்களையும் சோதனையாளருக்காகத் தயாராக வைத்திருத்தல்.
- ஒரு மாதிரியை அளிப்பது தொடர்பாக முன்பு பிரச்சினைகள் ஏற்பட்ட பின்னணி ஏதேனும் இருந்தால் அது பற்றிக் கூறுதல்.
- சோதனைக்கு 12 மணிநேரத்திற்கு முன்பு கடுமையான உடற்பயிற்சியைத் தவிர்த்தல்.
- சோதனைக்கு 24 மணிநேரத்திற்கு முன்பு உப்பு மற்றும் உயர் ரத்தக்கொழுப்பு உணவுகளைக் குறைவாக சாப்பிடுதல்.
- சந்திப்புக்குக் குறைந்தது 12 மணிநேரத்திற்கு முன்பு மது பானங்கள் எவற்றையும் குடிப்பதைத் தவிர்த்தல்.
- சந்திப்புக்கு 1 மணிநேரத்திற்கு முன்பு கஃபெயின், நிக்கோட்டின் ஆகியவற்றைக் குறைவாக உட்கொள்ளுதல்.
- சந்திப்புக்கு 1 மணிநேரத்திற்கு முன்பு ஒரு கோப்பை தண்ணீர் குடித்தல்.

**வேறு எந்தச் சேவைகளாவது நடத்தப்பட்டால், உடனடியாக ExamOne Quality Assurance-க்கு 1-800-873-8845 விரிவு 1303 என்ற எண்ணில் தெரியப்படுத்துங்கள்.** கனடா : 1-800-952-2350

---

ஒரு சந்திப்பு இந்த நேரத்தில் திட்டமிடப்பட்டுள்ளது:

தேதி: ______________________ நேரம்: ______________________

இடம்: ______________________ ExamOne தொலைபேசி எண்: ______________________